திருந்தார். அத்துடன் நாடு போற்றும் கவிதை எழுதுவதிலும் சிறந்த கவிஞராகவும் அவர் அடையாளங் காணப்பட்டார். ஜனரஞ்சகமான பாடல்களை எழுதி பாடுவதிலும் வல்லவராக அவர் திகழ்ந்தார். திரைத்துறையிலும் சிறந்து விளங்கியவர்.

### குச்சவெளியில் 400 குடும்பங்களை வெளியேற பசில் உத்தரவு

குச்சவெளியில் வதியும் 400 குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு சிறீலங்கா அரசாங்கம் பணித்துள்ளது. திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் தற்காலிகமாகக் கொட்டில்கள் அமைத்து வசித்து வரும் சுமார் 400க்கு மேற்பட்ட குடும்பங்களையே அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குடும்பங்களுக்கு காணிகளோ அல்லது தற்காலிக வீட்டு வசதிகளோ இன்னமும் வழங்கப்படாத நிலையில், பசில் ராஜபக்ச அந்த குடும்பங்களை வெளியேறுமாறு பணித்துள்ளார்.

### அடுத்த கட்ட போராட்டம் ஆயுத போராட்டம்

75 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட ஈழம் இன்று 15 கிலோ மீற்றராக சுருங்கிவிட்டது. ஈழமண் பறிபோனது. தமிழ் ஈழத்தில் மண்ணை இழந்துவிட்டோம். அந்த மண்ணை இழந்தாலும் விடமாட்டோம். ஆயுதப்போர் தொடங்கும், இது வரை ஈழம் மூன்று கட்ட போர்களை சந்தித்திருக்கிறது. முதற்கட்ட போர் பேச்சுவார்த்தை, இரண்டாம் கட்ட போர் அறப்போராட்டம், மூன்றாம் கட்ட போர் பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம். நான்காவது போரும் ஆயுதப் போராட்டமாக அமையலாம். ஆயுதப் போராட்டம்தான் எங்கள் தீர்வு. போர்க்குணம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். போராட்டம் தொடரும்' என்று காசி ஆனந்தன் தெரிவித்தார்.

தமிழர் மீட்சிப்படையில் இருந்த முத்துக்குமாருக்கும், புதுக்கோட்டை திராவிட கழகத்தின் முன்னாள் மாவட்ட தலைவர் கரு.காளிமுத்து மகள் மாதரசிக்கும் இன்று திருமணம் நடைபெற்றது. புதுக்கோட்டை ஜெயின் பேலஸில் தமிழ் முறைப்படி நடந்த இத்திருமணத்திற்கு கொளத்தூர்மணி, சீமான், நெடுஞ்செழியன், காசி ஆனந்தன் போன்றோர் முன்னிலை வகுத்தனர். இத்திருமண விழாவில் பேசியபோதே காசி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### கனடா உதயன் மக்களால் தாக்கப்பட்டது

சிறீலங்காவின் ஜனாதிபதி மகிந்த ராசபக்சவுடன் வர்த்தக உறவு கலந்துரையாடலில் பங்குபற்றியதற்காகவும் அச் செய்தியினை முன்பக்கத்தில் பிரசுரித்தமைக்காகவும் கனடா ஸ்காபரோவில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை தாக்கப்பட்டுள்ளது. கனடா உதயன் பத்திரிகை நிர்வாகி குலா செல்லத்துரை கனடா - சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக இருகின்றார். இவர் அண்மையில் சிறீலங்கா சென்று மகிந்த ராசபக்சவுடன் கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன் மகிந்தவுடன் சேர்ந்து படம் எடுத்து அதனை உதயன் பத்திரிகையில் முன் பக்கத்தில் பிரசுரித்தார். தமிழினப் படுகொலை புரிந்த மகிந்தவுடன் சூட்டுவைத்த உதயன் மீது ஆத்திரம் அடைந்த மக்கள், செல்லத்துரை பத்திரிகை அலுவலகம் செல்லும் வேளை பார்த்து அங்கு எதிர்ப்பு தெரிவித்து காரியாலையத்தையும் தாக்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.




# இந்தியாவின் கவலைக்கு 'இந்து' மூலம் மருந்து தடவிய மகிந்த!

சீனாவுடன் சிறீலங்கா நெருங்கி உறவாடுவது இந்தியாவிற்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி வருவது யாவரும் அறிந்த உண்மை. இந்த உண்மையை சிறீலங்காவின் ஜனாதிபதியே அண்மையில் ஒத்தக் கொண்டிருக்கின்றார். இந்தியாவின் செய்தி இதழ்களில்



ஒன்றானதும் சிறீலங்காவுடன் விருது பெறும் அளவிற்கு நெருங்கிய நட்புறவைக் கொண்டுள்ளதும், எப்போதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை திரித்து வெளியிட்டுவருவதுமான இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியில் சிறீலங்கா ஜனாதிபதி இந்த உண்மையை ஒத்துக் கொண்டிருக்கின்றார்.

சீனாவுடனான எனது தொடர்புகள் குறித்து அவர்கள் (இந்தியர்கள்) சற்று கவலையடைந்துள்ளனர். சீனா ஜப்பான் உட்பட பல நாடுகள் இங்கு முதலீடு செய்கின்றன. ஆனால் இந்தியா எனது உறவு நாடு. ஏனைய நாடுகளை, எனது நண்பர்கள் என்றே நான் எப்போதும் கூறுகிறேன் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளை அழித்த உரிமை யாருக்கு என்ற கேள்விக்கு பதிலளித்தபோது, சரத் பொன்சேகாவை ஒரு கூலித் தொழிலாளிக்கு ஒப்பட்டு தன்னை தாஜ்மகாலைக் கட்டிய சார்ஜகானாக வர்ணித்துள்ளார். அதற்கு அளித்த பதில் இவ்வாறுதான் அமைந்திருந்தது. தாஜ்மகாலைக் கட்டியவர் யார்? மக்கள் நினைவு கூர்வது தாஜ்மஹாலை நிர்மாணித்தவரையா? அதனைக்கட்டிய மேசனையா? அல்லது பிரதம பொறியியலாளரையா?? என்று கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, வன்னி மக்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், முகாமிலுள்ள மக்கள் வெளியேபோக விரும்பவில்லை என்று பொய்யான பரப்புரையை மேற்கொண்டார். முகாம்களில் 50,000 ற்கும் குறைவானவர்களே உள்ளனர் என்றும் அவர்களில் பலர் வெளியேபோக விரும்பவில்லை என்றும் கூறிய மகிந்த, மேற்கு நாடுகள் இதனை புரிந்து கொள்ளவில்லை. இங்கு என்ன நடக்கிறது என்பதே அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் அறிக்கை விடுகிறார்கள். மனிதாபிமான உதவிகள் பற்றிக் கேட்கிறார்கள். மனிதாபிமான உதவி தேவையில்லை என நான் கூறுகிறேன். எமது மக்களுக்கு உணவு வழங்கி அவர்களை நாங்கள் பராமரித்துக் கொள்கிறோம். இந்தியா விலிருந்து எந்த நேரத்திலும் உணவை பெற்றுக் கொள்ளலாம். அபிவிருத்தி உதவியே எங்களுக்குத் தேவையெனக் கூறினேன்.

மேற்கு நாடுகள் என்னை விரும்புவதில்லை. எனது சுயாதீனக் கருத்துக்களையும் அவர்கள் விரும்புவதில்லை. எனது நாடே எனக்கு முக்கியம். மற்றொரு நாட்டுக்கு நான் ஏன் விசுவாசமாக இருக்க வேண்டும். நான் பச்சை அட்டை (அமெரிக்க கிறீன்கார்ட்) வைத்திருப்பவரல்ல என்று கூறியுள்ளார்.

## மரணத்தை உறுதிப்படுத்துவதில் வலு அவசரம்

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உயிரிழப்பை உறுதிப்படுத்த மேலதிக ஆவணங்கள் தேவை என இந்தியா, சிறீலங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ராஜீவ் காந்தி படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக இந்த ஆவணங்கள் தேவைப்படுவதாக மத்திய புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். மரபணு பரிசோதனையின் மூலம் பிரபாகரனின் உயிரிழப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பிலான இலங்கையின் ஆவணங்கள் இந்திய நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப் போதுமானதாக அமையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்திய ஆவணத்தினை சிறீலங்கா வழங்கியுள்ளதாக சி.பி.ஐ. தமக்குத் தெரிவித்ததாக இந்திய உட்துறை அமைச்சர் இம்மாதம் தெரிவித்திருந்தார். எனினும் அவ் ஆவணங்கள் பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையால் சி.பி.ஐ. இன் பல்தரப்பு ஒழுக்காற்று கண்காணிப்பு முகவர் மேலும் சில ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு இம்மாதம் இரண்டாவது வாரத்தில் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

